நாள்: 04.06.2024

OS.29/2020

பெயர்: கஜலட்சுமி

வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்குச்சொத்து கீழும் மேலும் இரண்டு வீடுகள் என்றால் சரிதான். அந்த வீடுகள் ஆர்.சி.சி.ரூப் போட்ட வீடுகள் என்றால் சரிதான். அந்த வீடுகள் என்ன மதிப்பு போகும் என்றால் சுமார் ரூ.10 லட்சம் போகும். நான் காலியிடத்திற்குத்தான் மதிப்பு காட்டி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காலியிடம் என காட்டி வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என் தாத்தா சூரியகண்ணுபிள்ளை காலியிடமாகத்தான் தாவா சொத்துக்களை வாங்கினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு திருமணம் ஆகும்போது கீழ்தளத்தில் உள்ள வீடு மட்டும் தான் இருந்தது. மாடியில் உள்ள வீடு இல்லை. என் அண்ணன் பாஸ்பரன் தான் மேல்தளத்தில் உள்ள வீட்டை கட்டினாரா அல்லது என் அப்பா கட்டினாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்குச்சொத்து என் தாத்தா சூரியகண்ணுபிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் என் தாத்தா சூரியகண்ணுபிள்ளை பற்றி சில விபரங்கள் குறிப்பிட்டுள்ளேன் அது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கிற்கு எனது மருமகள் தான் வழக்கறிஞருக்கு விபரம் சொன்னார். என் மருமகளை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். என் தாத்தா சூரியகண்ணுபிள்ளைக்கு நாகம்மாள் என்ற ஒரு மகள் உண்டு. நாகம்மாளுடைய கணவர் மற்றும் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் கணவர் இறந்துவிட்டார். பிள்ளைகள் இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. அவர்கள் நெய்வேலியில் இருந்தார்கள். தற்சமயம் அவர்கள் இருக்கிறார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. நாகம்மாளுக்கு ரத்தினம், பரந்தாமன் என்ற இரண்டு ஆண்வாரிசுகள் உண்டு. மேற்படி நபர்களுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ள நிலையில் அவர்களை கட்சி சேர்க்காத இந்த வழக்கு அவசிய கட்சி சேர்க்காததால் குறைபாடுடையது என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு தங்கம் என்ற முதல் மனைவி

இருந்தார். அவர் இறந்துவிட்டார். அவர் மூலம் என் தகப்பனாருக்கு அய்யம்பெருமாள் என்ற மகன் இருந்தார் என்றால் இருந்தார். ஆனால் தற்சமயம் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்து விட்டாரா என்று எனக்கு தெரியாது. அய்யம்பெருமாளுக்கு எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது. அவருக்கு திருமணம் ஆன விபரம் எனக்கு தெரியும். சொத்தை இரண்டாகப் பிரித்தால் அனுபவிப்பதற்கு ஏதுவாக இருக்காது என்றால் சரியல்ல. பிரித்தால் கஸ்டம் தான். ஆனால் பிரித்து தான் ஆக வேண்டும். சொத்து பாகம் பிரிக்க இயலாத நிலையில் இருப்பதால் நான் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைத்தக்கதல்ல என்றும், நான் வேறு வழக்கைத்தான் தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் எதுவும் கிடையாது. என் திருமணத்தின் போது என் தந்தை உயிருடன் இருந்தார். என் அண்ணன் மருந்து வியாபாரம் செய்து வந்தார். என் தந்தை அரை செய் நிலத்தை குத்தகைக்கு எடுத்து அனுபவித்து வந்தார். சொந்தமாக நிலம் கிடையாது. என் அண்ணன் அவருடைய தனிப்பட்ட வருமானத்தை வைத்து தான் எனது பெற்றோர்களையும் எங்களையும் பராமரித்து வந்தார் என்றால் சரிதான். என்னை உப்புக்கோட்டையில் திருமணம் செய்து கொடுத்தார்கள். அங்கு என் கணவருடன் 25 ஆண்டுகள் வாழ்ந்தேன். என் கணவர் இறக்கும்போது எத்தனை வயது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என் கணவர் மது பழக்கத்தினால் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அதனால் என் தந்தை என்னை அழைத்து கீழே உள்ள வீட்டில் குடியிருக்க வைத்தார். நான் என் தந்தை வீட்டில் இருக்கும்போது என் கணவர் வீட்டிலிருந்து எனக்கு எந்த வருமானமும் கொடுத்ததில்லை. என் அண்ணன் தான் அவர் தனிப்பட்ட வருமானம் மூலம் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தை தான் பராமரித்து வந்தார். என் தந்தைக்கு எந்தவ ருமானமும் இல்லை என சாட்சியம் அளித்து விட்டு தற்சமயம் முன்னுக்குப் பின் முரனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டை என் அண்ணன் தான் கட்டினார் என்றால் சரியல்ல. என் அப்பா தான் கட்டினார். என் அத்தை மற்றும் என் சகோதரர் அய்யம்பெருமாள் வாரிசுகளை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் குறைபாடுடையது என்றால் சரியல்ல. என் தந்தையின் முதல் தாரத்து மனைவி மூலம் பிறந்த மகனான அய்யம்பெருமாள் உயிரோடு

இருந்தால் அவருக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அய்யம்பெருமாள் பெயரைக் குறிப்பிட்டுத்தான் வா.சா.ஆ.2 வாரிசுச்சான்றிதழ் வாங்கியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்தை இரண்டாகப் பிரிக்க முடியாது என்றும், அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.